07.11.2024

O.S.No.22/2014

**பி**.வா.சா.1.திரு. சோழ ராஜன்  த.பெ. வீரணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்துக்கள் வா.சா.ஆ1 உயில் ஆவணப்படி வாதிகளுக்கு பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 உயில் ஆவணம் 20.11.1934ல் எழுதப்பட்ட உயில் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தினை எழுதி வைத்த வீரணன் அம்பலம் 08.01.1935 அன்று இறந்து போய்விட்டார் என வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வீரணன் அம்பலம் இறந்த உடன் வா.சா.ஆ1 உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்து விட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ1 உயில்படி அதில் கண்டுள்ள சொத்தான இந்த தாவா சொத்துக்கள் தர்ம காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. ஆகையால் அந்த சொத்துக்களை நாங்கள் கிரையம் வாங்கி இருந்தாலும் அந்த கிரையம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கிரையம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவாசொத்தில் நான் அனுபவத்தில் இருந்தாலும் எனது கிரையம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்பதாலும், எனது கிரையம் செல்லதக்கதல்ல என்பதாலும் தாவா சொத்துக்களின் சுவாதீனத்தை வாதிகள் வசம் ஒப்படைக்க நான் கடமைபட்டவன் என்றால் சரியல்ல.